# வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்

## 2018 இறுதி ஆண்டு மதிப்பீடு

2021

© Verité Research

## உள்ளடக்க அட்டவணை


1. செலவீன முன்மொழிவுகள் ..................... 5

1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் ..................... 5

1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை ..................... 6

1.3. முன்னேற்றக் கண்காணிப்பான் ..................... 7

2. கொள்கைத் திட்டங்கள் ..................... 9

2.1. முன்னேற்றக் கண்காணிப்பான் ..................... 10

3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள். ..................... 12

## *வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்*

**"வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால்"** என்பது அரசாங்கம் அதன் வருடாந்த வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை பின்தொடர்ந்து கவனிக்கும் ஒரு முன்னோடி இணைய மேடையாகும்.

2017 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இணைய மேடை, அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரை சம்பந்தமான இரண்டு அடிப்படையான கேள்விகளுக்கு பதிலளிக்க முனைகின்றது.

- (i) அரசாங்கம் சொல்வதை செய்கின்றதா?
- (ii) அரசாங்கம் செய்வதை சொல்கின்றதா?

இக்கேள்விகளுக்கான பதில்களை பகிரங்கமாக வழங்குவதன் மூலம், இந்த இணைய மேடை பின்வருவனவற்றை அடைய முயல்கின்றது.

- (i) அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட வாக்குறுதிகளின் வெளிப்படை தன்மையை மேம்படுத்தல்
- (ii) இவ்வாக்குறுதிகளுக்கு அரசாங்கத்தை பொறுப்பாளி ஆக்குதல்

## *செயற்படும் விதம்*

BudgetPromises.Org இணைய மேடையானது, வரவு செலவுத் திட்ட உரையில் உள்ள ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்ட புதிய செலவின முன்மொழிவுகளை அல்லது 'வாக்குறுதிகளை' கண்காணிக்கிறது. (இம்முன்மொழிவுகளை வரவு செலவுத் திட்ட உரையின் பின்னிணைப்பு 2 இல் காணலாம்). 2019 ஆம் ஆண்டில், செலவீன ஒதுக்கீடு இல்லாத சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற கொள்கை முன்மொழிவுகளையும் இந்த இணைய மேடையானது கண்காணிக்க ஆரம்பித்தது.

| ஆண்டு | செலவீன முன்மொழிவுகள் | | | கொள்கை முன்மொழிவுகள் |
|---|---|---|---|---|
| | தெரிவு செய்வதற்கான அளவுகோல்[1] | முன்மொழிவுகளின் எண்ணிக்கை | திட்டங்களின் மொத்த மதிப்பு | முன்மொழிவுகளின் எண்ணிக்கை |
| 2017 | ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 116,910 மில்லியன் | எதுவுமில்லை |
| 2018 | ரூ.1பில்லியனுக்கு மேற்பட்டது | 38 | ரூ. 149,350 மில்லியன் | எதுவுமில்லை |
| 2019 | ரூ.500 மில்லியனுக்கு மேற்பட்டது | 37 | ரூ. 100,875 மில்லியன் | 22 |

இந்த இணைய மேடையானது வருடத்துக்கு இரண்டு தடவைகள் புதுப்பிக்கப்படும், அத்துடன் ஒவ்வொரு செலவீன முன்மொழிவும் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது: **வெளிப்படைத்தன்மை** மற்றும் **முன்னேற்றம்**. கொள்கைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவது ஒரே ஒரு குறிகாட்டியான **முன்னேற்றத்தை** மாத்திரம் பயன்படுத்தி கண்காணிக்கப்படுகின்றது. கொள்கைத் திட்டங்களின் நிலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் தங்கியிருக்காமல், முக்கியமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகின்றது. எனவே, கொள்கைத் திட்டங்களின் மதிப்பீடானது வெளிப்படைத்தன்மை குறிகாட்டியைக் கொண்டிருக்கவில்லை.

முதல் ஆறு மாதங்களுக்கான, வருட நடுப்பகுதி செயல்திறன் மதிப்பீடானது அக்டோபர் மாதத்தில் வெளியிடப்படும். அதேவேளை, முழு வருடத்திற்கான ஆண்டிறுதி செயல்திறன் மதிப்பீடானது தொடர்ந்து வரும் வருடத்தின் ஏப்ரல்/மே மாதங்களில் வெளியிடப்படுகின்றது.[2]

---

[1] 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்வதற்கான அளவுகோல், திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீட்டை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் வரவு செலவுத்திட்ட உரையின் அறிக்கையிடும் வடிவம் மாறியதனால், தெரிவுசெய்வதற்கான அளவுகோல் முன்மொழியப்பட்ட செலவின ஒதுக்கீடு மற்றும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

[2] 2019 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட உரை தாமதமானதுடன், 2019 மார்ச் மாதத்திலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே 2019 ஆம் ஆண்டில் ஆண்டிறுதி மதிப்பீடு மாத்திரமே முன்னெடுக்கப்பட்டது.

# 1. செலவீன முன்மொழிவுகள்

## 1.1. வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான்

இச்சுட்டியானது ஒவ்வொரு வாக்குறுதி தொடர்பாகவும் அரசாங்கம் தான் செய்வது பற்றி எந்தளவு வெளிப்படுத்துகிறது என்பதைக் கண்காணிக்கிறது. இக்கண்காணிப்பான் ஆனது, ஒவ்வொரு வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்படும் அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் நிலையை அளவிடுகின்றது. அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை கண்காணிப்பான் பயன்படுத்துகின்றது. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிறுவனங்களுக்கு விஜயம் செய்தும், முறைசாரா கோரிக்கைகளின் மூலமாகவும் தகவல்கள் திரட்டப்பட்டன. எனினும், இந்த தகவல் சேகரிக்கும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

வருட நடுப்பகுதி மதிப்பீடானது, ஒவ்வொரு வாக்குறுதியினதும் முதல் ஆறு மாதத்திற்கான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது. ஆண்டிறுதி மதிப்பீடானது, முழு வருடத்திற்குமான முன்னேற்றம் தொடர்பான தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட வெளிப்படைத் தன்மையின் அளவை மதிப்பிடுகின்றது.

மதிப்பீட்டின் போது கிடைக்கும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படைத்தன்மை பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

வெளிப்படையற்றது - வாக்குறுதியின் முன்னேற்றதைப்பற்றித் தீர்மானிப்பதற்கு தேவையான எவ்வித தகவலும் இல்லை.

மட்டுப்படுத்தப்பட்டது - கண்காணிக்கப்படும் கால இடைவெளியில் ஒரு முழுமையான மதிப்பீட்டை வழங்குவதற்குப் போதுமான தகவல்கள் இருக்கவில்லை.

ஒத்துழைக்கப்படாதது - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கடும் முயற்சியினால் பெறப்பட்டது அல்லது கடும் முயற்சியினால் மதிப்பிடப்பட்டது.

| | |
|---|---|
| ஒத்துழைக்கப்பட்டது | - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான வேண்டுகோள்களுக்கு, தகவல்கள் காலதாமதமின்றி வழங்கப்பட்டது. |
| வெளிப்படையானது | - வாக்குறுதியின் முன்னேற்றம் தொடர்பான முழுத் தகவல்களும் முன்வந்து வெளிப்படுத்தப்பட்டது. |

### *1.2. அரச நிறுவனங்களுக்கான வெளிப்படைத்தன்மை தரவரிசை*

அரச நிறுவனங்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள வாக்குறுதிகள் தொடர்பாக தகவல்களை வெளியிடுவதில் உள்ள வெளிப்படைத்தன்மையை ஒப்பிட்டு தரவரிசையை இது வழங்குகின்றது. ஒவ்வொரு நிறுவனமும் 0 முதல் 100 வரையில் மதிப்பெண்களைப் பெற்றுக்கொள்ளும், 100 என்பது உயர்ந்த பட்ச வெளிப்படைத்தன்மையை குறிக்கின்றது. அதன் பின்னர் அரச நிறுவனங்கள் மதிப்பெண்கள் அதிகமானது முதல் குறைவானது வரை தரவரிசைப்படுத்தப்படும், குறித்த ஆண்டில் அவற்றின் செயல்திறனை இது வெளிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் கீழ் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றுக்குமான மதிப்பெண்களின் சராசரியைக் கணக்கிடுவதன் மூலம் அரச நிறுவனத்தின் மொத்த புள்ளிகள் கணக்கிடப்படுகின்றன. ஒவ்வொரு வாக்குறுதியும் 0 முதல் 100 வரை மதிப்பெண்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தனிப்பட்ட வாக்குறுதிக்குமான மதிப்பெண்கள் கீழ்வருவனவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படும். (1) வாக்குறுதியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் தகவல்களின் பயன்பாட்டுத்தன்மை (2) தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை.

தகவலின் பயன்பாடு: கிடைத்த தகவல்கள் முழுமையாக பயன்படுத்தப்படக்கூடியவை, பகுதியளவில் பயன்படுத்தப்படக்கூடியவை அல்லது பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் ஒவ்வொரு வாக்குறுதிக்கும் 100, 50 அல்லது 0 என்ற ஆரம்ப மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மை: பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட ஆரம்ப மதிப்பெண், தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் இலகுத்தன்மைக்கு ஏற்ப மாற்றப்படுகின்றது. தகவல்கள் கோரப்பட்டதன் பின்னர் வழங்கப்படும்,

அதாவது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கைகளின் மூலமாக பெறப்படும் தகவல்களுடன் ஒப்பிடுகையில், தகவல்களைக் கோருவதற்கு முன்னரே அவற்றை வழங்கும், அதாவது ஒன்லைன் மூலம் வழங்கப்படும் தகவல்களுக்கு அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.




### *1.3. முன்னேற்றக் கண்காணிப்பான்*

இந்தச் சுட்டியானது அரசாங்கம் தாம் செய்வதாக சொல்பவற்றை எந்தளவுக்கு செய்கிறது என்பதைக் கண்காணிக்கின்றது. இது அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தினாலேயே நிர்ணயிக்கப்பட்ட நேர அட்டவணை மற்றும் மைல் கற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அதன் முன்னேற்றத்தை மதிப்பிடுகின்றது

ஒரு வாக்குறுதியின் வருட நடுப்பகுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

| | | |
|---|---|---|
| ? | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| | கைவிடப்பட்டுள்ளது | - வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளது அல்லது பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் அதன் அமுலாக்கம் கண்காணிக்கப்படும் |

காலஇடைவெளியில் திட்டமிடப்படாது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| புறக்கணிப்பட்டுள்ளது | - வாக்குறுதி அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது, ஆனால் திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படவில்லை |
| பின்தங்கியுள்ளது | - வாக்குறுதி அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது, ஆனால் திட்டமிடப்பட்ட காலஅட்டவணையுடன் ஒப்பிடும் போது பின்தங்கியுள்ளது. |
| முன்னேறியுள்ளது | - வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதுடன் குறித்த இலக்கை குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் அல்லது அதற்கு முன்னர் அடைவதற்கான நிலையில் காணப்படுகின்றது.[3] |

ஒரு வாக்குறுதியின் ஆண்டிறுதி மதிப்பீடானது பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது:

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதியின் நிலைமையை தீர்மானிப்பதற்குரிய தகவல்கள் வழங்கப்படவில்லை. அல்லது வழங்கப்பட்ட தகவல் போதுமானதாகவோ உபயோகமானதாகவோ இருக்கவில்லை. |
| கைவிடப்பட்டுள்ளது | - வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லை, அல்லது வாக்குறுதியானது அமுலாக்கல் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. |

[3] ஒரு குறிப்பிட்ட வாக்குறுதி ஜூன் 30 2019 அன்றைக்கு இலக்கிடப்பட்ட அடைவின் 90% இனை அடைந்திருக்கும் பட்சத்தில் அவ்வாக்குறுதி முன்னேற்றகரமானது என வகைப்படுத்தப்படுகின்றது

| | |
|---|---|
| முன்னேற்றம் அற்றது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் குறைவாக அடையப்பட்டுள்ளது. |
| பகுதியளவு நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 33% க்கும் 66% க்கும் இடையில் அடையப்பட்டுள்ளது. |
| கணிசமானளவு நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 66% க்கும் 80% க்கும் இடையில் அடையப்பட்டுள்ளது. |
| முற்றாக நிறைவேறியது | - வாக்குறுதியின் முன்னேற்றம் இலக்கில் 80% க்கும் அதிகமாக அடையப்பட்டுள்ளது. |

## *2. கொள்கைத் திட்டங்கள்*

வரவு செலவுத்திட்ட உரையில் அரசாங்கம் உறுதியளிக்கும் கொள்கைகளின் முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் வகையில் 2019 ஆம் ஆண்டில் budgetpromises.org தனது நோக்கத்தை விரிவாக்கிக் கொண்டது. இந்த திட்டங்களுக்கு எந்த செலவின ஒதுக்கீடும் இல்லை.

'நிறைவேற்றப்பட்டது' அல்லது 'பகுதியளவில் நிறைவேற்றப்பட்டது' எனக் கருதப்படுவதற்கு சட்ட ரீதியான செயற்பாடு அல்லது ஒழுங்குமுறை அறிவிப்பு (வர்த்தமானி) தேவைப்பட்ட திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. பகிரங்கமாக பொதுவெளியில் கிடைக்கும் தகவல்கள் அதாவது வர்த்தமானி அறிவித்தல்கள், அரசாங்க சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள் தொடர்பான அரசாங்க தகவல் திணைக்கள அறிக்கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியே திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றம் தொடர்பில் மதிப்பிடப்படுகின்றது. கொள்கை தொடர்பில் எந்தவித தகவலும் பகிரங்கமாக கிடைக்காத சந்தர்ப்பத்தில், கடிதங்கள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் மின்னஞ்சல் மூலமாக அமைச்சுக்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளப்பட்டது.

### *2.1. முன்னேற்றக் கண்காணிப்பான்*

வரவு செலவுத்திட்ட உரையில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைத் திட்டங்களை செயற்படுத்துவதில் அரசாங்கம் முன்னெடுத்த முன்னேற்றத்தின் அளவினை இது கண்காணிக்கின்றது.

| | |
|---|---|
| தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | - வாக்குறுதி சம்பந்தமாக எவ்வித தகவல்களும் இன்மை, அல்லது காணப்படும் தகவலினால் எவ்வித உபயோகமும் இன்மை. |
| நிறைவேற்றப்படவில்லை | - திட்டத்தின் எந்தவொரு பகுதிக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல்கள் (வர்த்தமானி) வெளியிடப்படவில்லை. இதனை சம்மந்தப்பட்ட அமைச்சு/அரச நிறுவனம் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. |
| பகுதியளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது | - திட்டத்தின் முழுமைக்கும் அன்றி ஒரு சில பகுதிகளுக்கு, தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளது. |
| நிறைவேற்றப்பட்டுள்ளது | - கொள்கைத் திட்டமானது முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. திட்டத்தின் முழுமைக்கும் தேவைப்படும் சட்டம் அல்லது ஒழுங்குமுறை அறிவித்தல் (வர்த்தமானி) வெளியிடப்பட்டுள்ளதுடன், மேலதிக எந்த நடவடிக்கையும் தேவையில்லை. |

### 3. முன்னேற்றம், திறந்த நிலை மற்றும் தரவரிசை மதிப்பீடுகளின் விவரங்கள்.

| வரவு செலவுத் திட்ட வாக்குறுதி | வெளிப்படைத்தன்மை கண்காணிப்பான் | முன்னேற்றக் கண்காணிப்பான் | ஏஜென்சி தரவரிசை |
|---|---|---|---|
| சொட்டு நீர்பாசனம், கோழி வேளாண்மை, உணவுப் பொருட்களை தகரத்தில் அடைத்தல், பெருந்தோட்டம் உள்ளடங்களாக விவசாயம் மற்றும் விவசாயப் பதப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள கம்பனிகள் மற்றும் ஹோட்டலகள், தமது தனிப்பட்ட பாவனைக்காக சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தினை உற | ஒத்துழைக்கப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது | நிதி அமைச்சு (முன்னதாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு) |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. அத்துடன் முன்னேற்றம் குறித்த மேலதிக தகவல்கள், மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பதிலிலிருந்து பெறப்பட்டது. | 2018 ஆம் ஆண்டு நடவடிக்கை திட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள எட்டு அம்சங்களில் நான்கு மட்டுமே நிறைவு செய்யப்பட்டுள்ளன. எனவே முன்னேற்றம் 50% என மதிப்பிடப்படுகிறது. | |

| | | | |
|---|---|---|---|
| அறுவககாறு திண்மக் கழிவு மீள் சுழற்சி, கழிவு முகாமைப் பகுதியினை அபிவிருத்தி செய்தல் | வெளிப்படையானது | பகுதியளவு நிறைவேறியது | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு |
| | முன்னேற்றம் குறித்த தகவல்கள், குறித்த அரசாங்க நிறுவனத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்த செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. அத்துடன், மேலதிக தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு மற்றும் மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பதில்களிலிருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 63% அடையப்பட்டுள்ளது. | |
| நிலத்தடி நீர் கண்காணிப்பு<br>பொறிமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | | | (முன்னதாக நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு) |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 93% அடையப்பட்டுள்ளது. | |
| ஒவ்வொரு பிரதேச சபை பிரிவிலும் அரச தனியார் | வெளிப்படையானது | பகுதியளவு நிறைவேறியது | மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| கூட்டுப்பங்கேற்புடன் பசுமைப் பூங்காக்களைத் தாபித்தல் | முன்னேற்றம் குறித்த தகவல்கள், குறித்த அரசாங்க நிறுவனத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்த செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. அத்துடன், மேலதிக தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு மற்றும் மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பதில்களிலிருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 39% அடையப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயல் திட்டத்திற்குமான நிதி ஒதுக்கீடு வழங்கப்படாதமையால், செயல் திட்டத்தில் பட்டியலிடப்பட்டுக் காட்டப்பட்ட செயல்களை அவற்றின் மொத்த செலவீனத்தால் எடையிடுவதன் மூலம் செயற்பாடுகளின் முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்பட்டது. ஒவ்வொரு துணை செயல் திட்டத்திற்குமான மொத்த செலவீனமானது, 2018 வரவு செலவுத்திட்ட வாக்குறுதியின் போது ஒதுக்கப்பட்ட நிதித்தொகையை மீறியுள்ளது. | |
| நிவ்வளா எளிய மாதிரிப் பூங்கா | வெளிப்படையானது | முன்னேற்றம் அற்றது | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் குறித்த தகவல்கள், குறித்த அரசாங்க நிறுவனத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்த செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. அத்துடன், மேலதிக தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு மற்றும் மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பதில்களிலிருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 10% அடையப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு செயல் திட்டத்திற்குமான தனி நிதி ஒதுக்கீடு வழங்கப்படாதமையால், ஒட்டு மொத்த முன்னேற்றமானது, வாக்குறுதியின் கீழ் காணப்படும் அனைத்து செயல் திட்டங்களினதும் சராசரி பௌதீக முன்னேற்றத்தைக் கணிப்பதன் மூலம், தீர்மானிக்கப்பட்டது. வாக்குறுதியின் கீழ் பட்டியலிடப்பட்ட நான்கு வாக்குறுதிகளில் இரண்டுக்கு முன்னேற்றம் தொடர்பான தரவுகள் வழங்கப்படாமையால், அவற்றின் முன்னேற்றம் 0% என கருதப்பட்டது. | |
| 10<br>களப்புக்களை சுத்தப் படுத்தல் | ஒத்துழைக்கப்பட்டது | பகுதியளவு நிறைவேறியது | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், |

| | | | |
|---|---|---|---|
| | | | கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு (முன்னதாக கடற்றொழில், நீரகவளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு) |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட, தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 45% அடையப்பட்டுள்ளது. | |
| சிறிய மற்றும் நடுத்தர குளங்களின் தூர் எடுத்தல். | ஒத்துழைக்கப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு (முன்னதாக கமத்தொழில் அமைச்சு) |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 75% அடையப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த முன்னேற்றமானது, செயல் திட்டத்தில் பட்டியலிடப்பட்ட அனைத்து செயல் திட்டங்களையும் அவற்றுக்கான நிதி ஒதிக்கீட்டால் எடையிடுவதன் மூலம், தீர்மானிக்கப்பட்டது. நடப்பு செயற்பாடுகளுக்கான முன்னேற்றம் 50% என கருதப்பட்டது. | |
| விவசாயிகளுக்கு பங்களிப்பு காப்புறுதி திட்டமொன்றினை அறிமுகப்படுத்தல் | மட்டுப்படுத்தப்பட்டது | முற்றாக நிறைவேறியது | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு (முன்னதாக கமத்தொழில் அமைச்சு) |

| | | | |
|---|---|---|---|
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. இருப்பினும், நடு வருடாந்த மதிப்பீட்டின் போது பெறப்பட்ட செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, திட்ட இலக்குகளை ஒப்பிட முடியாததால், பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற "செப்டம்பர் 30, 2018 ஆம் தேதி அன்றான பெரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்" என்ற தகவலுக்கு இணங்க முன்னேற்ற அளவு மதிப்பிடப்பட்டது. | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு இணங்க, 2018 செப்டம்பர் 30 ஆம் தேதி அன்றான முன்னேற்றம், 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 100% என அறிக்கையிடப்பட்டுள்ளது. இருப்பினும் மின்னஞ்சல் மூலம் குறித்த அரசாங்க நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் படி, குறித்த வாக்குறுதிக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் 22% மட்டுமே 2018 இல் திறைசேரியால் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆரம்ப செயல் திட்டத்தில் செய்வதாக பட்டியலிடப்பட்ட பெரும்பாலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு போதுமான நிதி இருக்கவில்லை. | |

| | | | |
|---|---|---|---|
| மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் | ஒத்துழைக்கப்பட்டது | முற்றாக நிறைவேறியது | கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு (முன்னதாக கடற்றொழில், நீரகவளமூல அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு) |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 87% அடையப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த முன்னேற்றமானது, செயல் திட்டத்தில் பட்டியலிடப்பட்ட அனைத்து செயல் திட்டங்களையும் அவற்றுக்கான நிதி ஒதிக்கீட்டால் எடையிடுவதன் மூலம், தீர்மானிக்கப்பட்டது. முன்னைய செயல்திட்டங்களின் படி | . |

| | | | |
|---|---|---|---|
| | | (திருத்தப்பட்ட பின்னர்), விரிவான வடிவமைப்பு கட்டத்தில் உள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் 2% எனவும் கொள்முதல் கட்டத்தில் உள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் 5% எனவும் கருதப்பட்டது. | |
| அபிவிருத்தி வங்கியினைத் தாபித்தல் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | நிதி அமைச்சு (வரவு செலவுத்திட்ட உரையில் இவ் வாக்குறுதி, முதலில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது.) |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், மின்னஞ்சல் மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு, குறித்த அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. இருப்பினும், இத்தகவல்கள் வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்கு போதுமானதாக இல்லை. | வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்கு போதுமான தகவல்கள் இல்லை. | |

| | | | |
|---|---|---|---|
| கிராம சக்தி, வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | சனாதிபதி செயலகம் |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. முன்னேற்றம் குறித்த மேலதிக தகவல்கள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் இணையத்தளத்தில் இருந்தும் பெறப்பட்டன. இருப்பினும், செயல் திட்டத்தில் காட்டப்பட்ட திட்டம் தொடர்பான இலக்குகளுடன் இவற்றை ஒப்பிட முடியாமையினால், பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. | முன்னேற்றம் பற்றிய விரிவான தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட, தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்களது இலக்குகளை அடைய அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதனால் ஏற்றப்பட்ட முன்னேற்றம் என்பவற்றை தீர்மானிக்க முடியவில்லை. | |
| மில்லேனியாவில் ரோஜானா<br><br>தொழிற்பூங்காவிற்கு | ஒத்துழைக்கப்பட்டது | கைவிடப்பட்டுள்ளது | அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, பதில்கள் மற்றும் குறித்த அரச நிறுவனத்தின் இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொண்ட செயல் திட்டம் என்பவற்றின் இருந்து பெறப்பட்டது. முன்னேற்றம் குறித்த மேலதிக தகவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற "செப்டம்பர் 30, 2018 ஆம் தேதி அன்றான பெரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்" என்ற தகவலில் இருந்து பெறப்பட்டது. இருப்பினும், தாய்லாந்து முதலீட்டுப் பங்குதாரரான ரோஜானா இண்டஸ்ட்ரீஸ் உடன் எந்த ஒப்பந்தமும் எட்டப்படாமையால் எழுந்த செயல் பரப்பு மாற்றம் | வாக்குறுதியின் செயல் பரப்பு மாற்றப்பட்டமையால், இவ்வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக, இவ் வாக்குறுதி கைவிடப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டது. | | |
| வேலை வாய்ப்பு தயாரிப்பு நிதியம்" ஒன்றினைத் MNPEAயில் தாபித்தல் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு (முன்னதாக இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு) |
| | குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தொலைபேசி அழைப்பிற்கும், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான வேண்டுகோளுக்கும் எந்தவொரு தகவலும் வழங்கப்படவில்லை. மேலும், வாக்குறுதியின் முன்னேற்றத்தை தீர்மானிக்கப் | வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்கு போதுமான தகவல்கள் இல்லை. | |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தக்கூடிய எந்த தகவலும் குறித்த அரசாங்க நிறுவனத்தின் இணையத்தளத்தில் கிடைக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரச நிறுவனம்,'இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு' என்பன தமது கடமையின் கீழ் இல்லை எனவும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழான எமது தகவலுக்கான கோரிக்கையை பொருத்தமான அமைச்சுக்கு மேற்கொள்ளுமாறும், பதிலளித்தது. எவ்வாறாயினும், 28.12.2018 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி(இலக்கம் 2103/33) அறிக்கையின் படி இளைஞர் அலுவல்கள் அமைச்சானது, தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், | | |

| | | | |
|---|---|---|---|
| | புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (18.03.2019 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி (இலக்கம் 2115/1) அறிக்கையின் படி, இது தற்போது தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சாகும்) | | |
| இளைஞர் படையணியினால் நடாத்தப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான ஒத்துழைப்பு | ஒத்துழைக்கப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | தேசிய இளைஞர் படையணி |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. | கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி அன்று, 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 78% அடையப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| ஜேர்மன் தொழில்நுட்ப கல்லூரியுடன் இணைந்து சுவிஸ் மற்றும் ஜேர்மன் அரசாங்கங்கள் ஐந்து தொழில்நுட்பக் கல்லூரிகளைத் ஸ்தாபித்தல் | வெளிப்படையற்றது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு (முன்னதாக இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு) |
| | குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட தொலைபேசி அழைப்பிற்கும், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான வேண்டுகோளுக்கும் எந்தவொரு தகவலும் வழங்கப்படவில்லை. மேலும், வாக்குறுதியின் முன்னேற்றத்தை தீர்மானிக்கப் பயன்படுத்தக்கூடிய எந்த தகவலும் குறித்த அரசாங்க நிறுவனத்தின் | வாக்குறுதியின் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதற்கு போதுமான தகவல்கள் இல்லை. | |

| | | | |
|---|---|---|---|
| | இணையத்தளத்தில் கிடைக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு, குறித்த அரச நிறுவனம்,'தொழில் நுட்ப மற்றும் தொழிற்கல்வி' என்பன தமது கடமையின் கீழ் இல்லை என பதிலளித்தது. | | |
| கல்வி மறுசீரமைப்பு | மட்டுப்படுத்தப்பட்டது | கணிசமானளவு நிறைவேறியது | கல்வி அமைச்சு |
| | முன்னேற்றம் பற்றிய தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்ட, செயல் திட்ட மற்றும் முன்னேற்ற அறிக்கையில் இருந்து பெறப்பட்டது. இருப்பினும், முன்னேற்றமானது அனைத்து நடவடிக்கைகளூடாகவும் ஒரே மாதிரியாக அறிக்கையிடப்படாததன் காரணத்தால், பெறப்பட்ட | முன்னேற்றம் பற்றிய விரிவான தகவல்கள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் உரிமை சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட, தகவலுக்கான கோரிக்கைக்கு பதிலாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவர்களது இலக்குகளை அடைய அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் மற்றும் அதனால் ஏற்றப்பட்ட முன்னேற்றம் என்பவற்றை தீர்மானிக்க முடியவில்லை. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் | |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்களின் அடிப்படையில் முன்னேற்றத்தை தீர்மானிக்க முடியவில்லை. கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற "செப்டம்பர் 30, 2018 ஆம் தேதி அன்றான பெரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்" என்ற தகவலுக்கு இணங்க முன்னேற்ற அளவு மதிப்பிடப்பட்டது. | திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கு இணங்க, 2018 செப்டம்பர் 30 ஆம் தேதி அன்றான முன்னேற்றம், 2018 ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்ட, இலக்கில் 80% ஆகும். | |
| ஆசிரியர்களுக்கான தொடர்ச்சியான | மட்டுப்படுத்தப்பட்டது | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | கல்வி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
